கூட்ட எண் 06
2019 - 2020 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 31.10.2019

2019-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31.10.2019 ந்தேதி வியாழக் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செப்டம்பர் 2019 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் 2019 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. இந்நகராட்சி பொதுப் பிரிவில் உதவியாளராக பணிபுரிந்து வரும் H. கவிதா என்பவர்கு புதியதாக இருசக்கர மோட்டார் வாகனம் வாங்க அரசாணை எண் 467 நிதி (சம்பளம்) துறை நாள் 22.09.2009ன்படி முன்பணமாக தொகை ரூ. 50000/- மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண் 2120/பி2/2019)

4. இந் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 30.06.2019 அன்று ஓய்வு பெற்ற திரு. C. சேட்டு என்பவர்க்கு 1. சிறப்பு சேமநல நிதி அசல் ரூ. 2960/- 2.சிறப்பு சேமநல நிதி சந்தாக்கான வட்டி ரூ.31356/- 3.நிர்வாக பங்குத் தொகை ரூ.10000/- ஆக மொத்தம் ரூ.44316/- வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண் 2060/பி2/2019)

5. ஆரணி நகராட்சி வார்டு எண் 01 புதுகாமூர் ரோடில் உள்ள நீர்த் தேக்கத் தொட்டி, வார்டு எண் 15 களத்து மேட்டுத் தெரு பகுதியில் உள்ள நீர்த் தேக்கத் தொட்டி ஆகியவைகளுக்கு கிரில் கேட் அமைத்தல். மற்றும் சேத்பட் சாலையில் மெயின் பைப் உடைப்பு ஏற்பட்டதை சரி செய்ய அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் வசம் ஒப்படைத்து பணியினை செய்து முடிக்கவும், அதற்காகும் உத்தேச தோராய செலவினம் ரூ.1.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். மேலும், அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற திரு. இ.இளங்கோவன் ஒப்பந்ததாரர் வசம் ஒப்படைத்து பணியினை செய்து முடித்ததை மன்றம் ஏற்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 765/இ1/2019)

6. ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி 2019 - 2020ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள 11.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம்<br>**வருவாய் நிதி** | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப் புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான வெங்கட்ராமன் பூங்கா சுற்றுச் சுவர் அமைத்தல் | 4.25 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.03% குறைவு<br>0.40%. அதிகம் |
| 2 | நகராட்சி அலுவலக தரைதளத்தில் கழிவறை அமைத்தல் பணி | 4.00 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.20% குறைவு<br>0.32%. அதிகம் |
| 3 | கோட்டை வடக்கு தெரு ஆடு அடிக்கும் இடம் மற்றும் பழனி ஆண்டவர் கோயில் தெரு ஆகிய இடங்களில் சிறுபாலம் அமைத்தல் | 1.50 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.50% குறைவு<br>0.70%. அதிகம் |
| 4 | அருணகிரி சத்திரம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நிழற்குடைக்கு பித்தளையால் ஆன வாசகம் பொறுத்தும் பணி | 1.60 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.02% குறைவு<br>0.50%. அதிகம் |
| 5 | குடிநீர் நிதி ஆரணி நகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் விநியோகம் செய்யும் வால்வுத் தொட்டிகள் பழுது பார்த்தல் பணி | 6.50 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.01% குறைவு<br>0.10%. அதிகம் |
| 6 | கல்வி நிதி வார்டு எண் 25ல் உள்ள அங்கன்வாடி மையக் கட்டடத்திற்கு மேற்கூறை அமைத்தல் பணி | 1.00 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.50% குறைவு<br>0.70%. அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்குறிப்பிட்டுள்ள பணியின் அவசியத்தை கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரருக்கு நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 765/இ1/2019)

7. திரு.G. சுரேஷ்குமார் த/பெ கோவிந்தசாமி கதவு எண் 14, வீரபத்திரன் தெரு, ஆரணி என்பவர் ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபத்திரன் தெரு மற்றும் சுந்தரம் தெரு சந்திப்பில் சாலையில் உள்ள ஆக்கிரமிப்பு கட்டடத்தை இடிக்கக் கூடாது என தெரிவித்து ஆணையாளதை 2ஆம் பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No. 26656/2019ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் ஆஜராக நகராட்சி வழக்கறிஞர் திரு- எம். பால்ராஜ் அவர்கள், வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழங்க கோரியுள்ளார். எனவே, மேற்படி வழக்கறிஞர் கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். மேலும், அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வழக்கறிஞர் கட்டணம் செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 60/எப்1/2017)

8. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான மாடு அடிக்கும் தொட்டியினை 2019 - 2020ம் ஆண்டிற்கு புதுப்பிக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு F.TVM0375/RS/DEE/TNPCB/TVM/2019 நாள் 06,09,2019 கடிதத்தின்படி, ரூ.17600/- செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம், தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 2221/எச்1/2019)

9. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிமேற்பார்வையாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. N.சௌந்தரராஜன் என்பவர் ஓய்வூதிய பயன்கள் வழங்க கோரி நீதிமன்ற அவமதிப்பு வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் C.P.No.1817of 2019ல் வழக்கு தொடர்ந்துள்ளார். அதற்கு நகராட்சி சார்பாக ஆஜரான அரசு கூடுதல் வழக்கறிஞர் ஸ்ரீஜெயந்தி என்பவருக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.15000/- வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 173/எச்1/2018)

10. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட விரிவாக்க மனைப்பிரிவு பகுதிகளில் உள்ள மண்சாலைகள் மேம்படுத்தவும், மற்றும் குடிநீர் அபிவிருத்தி பணிகளில் சேதமடைந்த சாலைகளை செப்பணிடும் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ. 650.00 இலட்சத்திற்கு விரிவாக திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது அதன் விவரம் பின்வருமாறு :-

| வ எண் | உறை எண் | வார்டு எண் | பணியின் விவரம் | சாலை விவரம் | நீளம் (கி.மீ) | அகலம் (கி.மீ) | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 1,4,6,7, 8,9,10,12,13, 14,16,17,& 19 | வார்டு எண் 01 புதுகாமூர் சாலை, வார்டு எண் 06 பெரியகடை தெரு, வார்டு எண் 10 விநாயகர் கோயில் தெருவில் தார்சாலையுடன் கூடிய மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல். வார்டு எண் 04 பிள்ளையார் கோயில் தெரு, போலீஸ் ஸ்டேஷன் தெரு, வார்டு எண் 06 மற்றும் 07ல் உள்ள வடக்கு மாட தெரு, வ.உ.சி தெரு, பெரியகடை தெரு, வார்டு எண் 08 பரசுராமன் தெரு, முனுசாமி தெரு, வார்டு எண் 09 இந்திரா நகர் விரிவு பகுதி, வார்டு எண் 10 அருணாசலாஈஸ்வரன் கோயில் தெரு, வார்டு எண் 12 மேனேஜர் முருகேசன் தெரு, கல்யாண சுந்தரனார் தெரு, வார்டு எண் 13 அவ்வையார் தெரு, வார்டு எண் 14 திருவள்ளுவர் தெரு, வார்டு எண் 16 வேதபுரிஈஸ்வரன் கோயில் தெரு, வார்டு எண் 17&19ல் உள்ள தர்மராஜா கோயில் தெரு, பெரியசாயக்காரத் தெரு, மருதூரான் தெருவில் தார்சாலை அமைத்தல் பணி | தார் சாலை | 4.535 | 4.10 to 6.00 | 215.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | 2 | 18, 19 20, 21 22, 23 25, 26 27 28 | வார்டு எண் 19 சுந்தரம் தெருவில் தார்சாலையுடன் கூடிய மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல். வார்டு எண் 18 அம்பேத்கார் நகர் பகுதியில் தார்சாலை மற்றும் சிறுபாலம் அமைத்தல். வார்டு எண் 20 விஸ்வேஸ்வரய்யா தெரு, தாதுத் தெரு வார்டு எண் 21 மாரியம்மன் கோயில் தெரு, வார்டு எண் 22 அப்பாசாமி தெரு. வார்டு எண் 23 ஜீவா நகர், குமரன் நகர், வார்டு எண் 25 சைதை கந்தசாமி தெரு, வார்டு எண் 25 நாடகசாலை பேட்டை தெரு, வார்டு எண் 26 மேட்டுத் தெரு, பவர்அவுஸ் தெரு, வார்டு எண் 27 காமராஜர் நகர், முள்ளிப்பட்டு ரோடு (எம்.ஜி.ஆர் நகர்) மற்றும் வார்டு எண் 28 சைதை பள்ளிக் கூடத் தெரு பிரதான சாலை தார்சாலை அமைத்தல் பணி | தார் சாலை | 4.370 | 4.10 to 6.00 | 212.00 |
| 3 | 3 | 30,32, & 33 | வார்டு எண் 30 வி.ஏ.கே நகர் 4வது தெரு, மீனாட்சியம்மன் நகர், ராஜேஸ்வரி நகர், முருகா நகர், தார்சாலை அமைத்தல், வார்டு எண் 32 கோட்டை வடக்கு தெரு, முஸ்லீம் பள்ளிக்கூடத் தெரு, மற்றும் வார்டு எண் 33 பள்ளிக் கூடத் தெரு பிரதான சாலை தார்சாலை அமைத்தல் பணி | தார் சாலை | 2.270 | 4.10 to 6.00 | 108.00 |
| 4 | 4 | 1,6,15 22, 26, 28, 29 & 33 | வார்டு எண் 01 வடக்கு தர்மராஜா கோயில் தெரு, வார்டு எண் 15 களத்து மேட்டுத் தெரு, வார்டு எண் 22 தாண்டவராயன் தெரு, வார்டு எண் 28 சைதை பள்ளிக் கூடத் தெரு விரிவுப் பகுதி பேவர் பிளாக் சாலையுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல், வார்டு எண் 06 தேசாய் தெரு, தரணித் தெரு, சரஸ்வதி நகர், மற்றும் வார்டு எண் 26 கார்த்திகேயன் ரோடு, வார்டு எண் 29 காந்தி நகர் பின்புறம் மற்றும் வார்டு எண் 33 பள்ளிக்கூடத் தெரு விரிவு பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி | பேவர் பிளாக் சாலை | 1.625 | 2.00 to 4.00 | 115.00 |
| | | | மொத்தம் | | 12.800 | | 650.00 |

அலுவலக குறிப்பு :- மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடிற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணிகளுக்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (IUDM) 2019-2020ன் கீழ் முழுமான்யமாக பெற்று பணிகள் மேற்கொள்ள உரிய பிரேரரணை அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 2280/இ1/2019)

11. ஆரணி நகராட்சி அலுவலக கட்டடம் கட்டப்பட்டு சுமார் 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. இக்கட்டடம் தற்போது சிதலமடைந்து ஆங்காங்கே நீர் கசிவு ஏற்படுகிறது. மேலும், இதனை பலமுறை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டும் சரி செய்ய இயலவில்லை. எனவே, ஆரணி நகராட்சிக்கு புதியதாக அலுவலக கட்டடம் கட்டும் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.500.00 இலட்சத்திற்கு விரிவாக திட்ட மதிப்பீடிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ. எண்** | **உறை எண்** | **வார்டு எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்)** |
|---|---|---|---|---|
| 1 | 1 | 32 | ஆரணி நகராட்சி புதியதாக அலுவலக கட்டடம் கட்டும் பணி | 500.00 |

அலுவலக குறிப்பு :- மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடிற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணிகளுக்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (IUDM) 2019-2020ன் கீழ் முழுமான்யமாக பெற்று பணிகள் மேற்கொள்ள உரிய பிரேரரணை அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். கோப்பு எண் 2281/இ1/2019

12. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 32 பள்ளிக் கூடத் தெருவில் உள்ள அகழியிலிருந்து பையூர் ஏரிவரை செல்லும் நீர்வரத்துக் கால்வாய் கட்டுமான பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.600.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 30, 32, 33, மற்றும் 01 | ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 32 பள்ளிக் கூடத் தெருவில் உள்ள அகழியிலிருந்து பையூர் ஏரியில் கலக்கும் நீர்வரத்துக் கால்வாய் கட்டுமான பணிகள் | 600.00 |

அலுவலக குறிப்பு :- மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடிற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணிகளுக்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (IUDM) 2019-2020ன் கீழ் முழுமான்யமாக பெற்று பணிகள் மேற்கொள்ள உரிய பிரேரரணை அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். கோப்பு எண் 2282/இ1/2019

13. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து வகையாக கட்டமைப்புகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் மற்றும் குடிநீர் சிக்கனம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை அவர்களின் நேராய்வு கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டது. ஆரணி நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து வகையான கட்டுமானங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளதை அறியும் வண்ணம் சம்மந்தப்பட்ட கட்டமைப்புகளில் ஸ்டிக்கர் ஓட்டப்பட வேண்டும் என்பதால், நகர மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் மற்றும் குடிநீர் சிக்கனம் குறித்த மல்டிகலர் நோட்டீஸ் (இருபக்க பிரிண்ட்) 30,000 எண்ணிக்கை மற்றும் மல்டிகலர் ஸ்டிக்கர் 15,000 எண்ணிக்கையில் அச்சடித்து வழங்க விலைப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி, வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு, அதற்காக ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ 4,00,000 மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1.அரும்பாக்கம் ஸ்டேஷனரிஸ் & பிரிண்டிங் சர்வீஸ் இண்டஸ்ட்ரியல் கோ - ஆப்ரேடிவ் சொசைட்டி லிமிடட்., KVI No.2/2017, அரும்பாக்கம், சென்னை - 600 106. | **மல்டி கலர் நோட்டீஸ் (இருபக்க பிரிண்ட்)** 4.48 X 30000 எண்ணிக்கை = ரூ 1,34,400 மற்றும் **மல்டிகலர் ஸ்டிக்கர்** 17.70 X 15000 எண்ணிக்கை = ரூ 2,65,500 ஆக மொத்தம் = ரூ 3,99,900 |
| 2.சேலம் ஸ்டேஷனரிஸ் & பிரிண்டிங் சர்வீஸ் இண்டஸ்ட்ரியல் கோ - ஆப்ரேடிவ் சொசைட்டி லிமிடட்., சேலம் - 636 103. | **மல்டிகலர் நோட்டீஸ் (இருபக்க பிரிண்ட்)** 5.00 X 30000 எண்ணிக்கை = 1,50,000 மற்றும் **மல்டிகலர் ஸ்டிக்கர்** 18.00 X 15000 எண்ணிக்கை = 2,70,000 ஆக மொத்தம் = ரூ 4,20,000 |
| 3.திருநெல்வேலி மாவட்ட மட்டி பர்ப்பஸ் சர்வீஸ் இண்டஸ்ட்ரியல் கோ - ஆப்ரேடிவ் சொசைட்டி லிமிடட்., IND. No. TNY – 2, திருநெல்வேலி சந்திப்பு - 627 001. | **மல்டிகலர் நோட்டீஸ் (இருபக்க பிரிண்ட்)** 4.70 X 30000 எண்ணிக்கை = 1,41,000 மற்றும் **மல்டிகலர் ஸ்டிக்கர்** 17.90 X 15000 எண்ணிக்கை = 2,68,500 ஆக மொத்தம் = ரூ 4,09,500 |

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதி அளிக்கலாம். மேலும் மேற்குறிப்பிட்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள அரும்பாக்கம் ஸ்டேஷனரி & பிரிண்டிங் சர்வீஸ் இண்டஸ்ட்ரியல் கோ - ஆப்ரேடிவ் சொசைட்டி லிமிடட்., KVI No.2/2017, சென்னை என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்கலாம். இத்திட்டத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேற்படி. பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். இதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். ந.க.எண். 1388/எப்1/2019

14. இந் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 30.06.2019 அன்று ஓய்வு பெற்ற திரு. M. துரைக்கண்ணு என்பவர்க்கு 1. சிறப்பு சேமநல நிதி அசல் ரூ. 2960/- 2. சிறப்பு சேமநல நிதி சந்தாக்கான வட்டி ரூ. 31682/- 3. நிர்வாக பங்குத் தொகை ரூ. 10000/- ஆக மொத்தம் ரூ. 44562/- வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண் 1519/பி2/2018)

15. ஆரணி நகராட்சி காந்தி சாலை அருகில் வார்டு C பிளாக் 7, சர்வே எண் 14ல் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 2784.05 ச.மீட்டர் பரப்பளவில் புதியதாக 144 எண்ணிக்கையில் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP Mode) காய்கறி மார்கெட் வளாக கட்டடம் வடிவமைத்து கட்டுமானம் செய்து நிதி வழங்கி 15 ஆண்டு காலத்திற்கு பராமரித்து மீண்டும் நகராட்சிக்கு ஒப்படைக்கும் கருத்தாக்கம் அடிப்படையில் (Design Build, Finance Operate and Transfer (DBFOT) basis of Public Private Partnership (PPP) Mode) பணி மதிப்பீடு ரூ.250.00 இலட்சத்தில் மேற்கொள்ள ஒப்பந்ததாரர் திரு. P.பாபு, பாரி ஸ்வீட்ஸ், 215A காந்தி ரோடு, ஆரணி என்பவர்கு பணி ஆணை வழங்கி தற்போது பணி நடைபெற்று வருகின்ற நிலையில், மேற்குறிப்பிட்ட கட்டுமான பணிகளை கண்காணிக்க தனியார் கட்டட கலந்தாலோசகர் ஒருவரை நியமனம் செய்து கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் தெரிவிக்கப்படடுள்ளதற்கிணங்க, மேற்படி, பணிகளை ஆய்வு செய்து அவ்வப்போது அறிக்கை சமர்ப்பிக்க உரிய கட்டட கலந்தாலோசகரை சுமார் ஆறு மாத காலத்திற்கு நியமனம் செய்து கொள்ளவும், அதற்கு ஆகும் தோராய செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதியளிக்கலாம். மேலும், மேற்படி கலந்தாலோசகர் வழங்க வேண்டிய தொகையில் 50% சதவிகித தொகை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும், மீதி 50% சதவிகித தொகையினை ஒப்பந்ததாரர் திரு.P.பாபு, பாரி ஸ்வீட்ஸ், 215A காந்தி ரோடு, ஆரணி என்பவர் வழங்கவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1564/2018/இ1)

16. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான வெங்கட்ராமன் பூங்காவில் உள்ள மின்விளக்குகள் பழுதடைந்து ஒளிராமல் உள்ளது. இதனால் பூங்காவிற்கு வரும் பொது மக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே, பொது மக்களின் நலன் கருதி மேற்படி மின்விளக்குகள் பழுது சரிசெய்து ஒளிர வைக்கும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப் பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் அதற்காக ஆகும் உத்தேச தோராய ரூ.30000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

1. திரு.இ.இளங்கோவன்
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ. 29990/-
2. திரு. எ.அசோக்குமார்,
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ. 31000/-
3. திரு. ஆர். கந்தன்
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ. 32000/-

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை அங்கீகரித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 765/2019/இ1)

17. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வடகிழக்கு பருவமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், கால்வாய்களில் தூர் வாருதல் பணி அவசியமாகிறது. மழை வெள்ளம் தேங்காமல் இருப்பதற்காக வார்டு எண் 01 சத்யா நகரில் உள்ள பெரிய கால்வாய்கள் JCB இயந்திரம் மூலம் அவசர அவசியம் கருதி பணிகளை மேற்கொள்ள அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ.27200/-யை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 2332/2019/எச்1)

18. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வடகிழக்கு பருவமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், கால்வாய்களில் தூர் வாருதல் பணி அவசியமாகிறது. மழை வெள்ளம் தேங்காமல் இருப்பதற்காக வார்டு எண் 28 கார்த்திகேயன் ரோடில் உள்ள கால்வாய்கள் JCB இயந்திரம் மூலம் அவசர அவசியம் கருதி பணிகளை மேற்கொள்ள அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ. 27200/-யை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 2332/2019/எச்1)

19. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வடகிழக்கு பருவமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், கால்வாய்களில் தூர் வாருதல் பணி அவசியமாகிறது. மழை வெள்ளம் தேங்காமல் இருப்பதற்காக வார்டு எண் 01 புதுகாமூர் ரோடில் உள்ள கால்வாய்கள் JCB இயந்திரம் மூலம் அவசர அவசியம் கருதி பணிகளை மேற்கொள்ள அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ. 26000/-யை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 2332/2019/எச்1)

20. ஆரணி நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டம் முடிவுற்றதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் ஒருசில தெருக்களில் பகிர்மான குழாய் அமைக்கப்படாத நிலையில் உள்ளது. மேலும், தற்போது இந்நகராட்சியில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்புகள் வழங்க வேண்டி அரசின் திட்டம் நடைமுறையில் உள்ளதால் இணைப்பு வழங்கம் பொருட்டு, விடுபட்ட தெருக்களில் புதிய பகிர்மான குழாய் அமைக்க மேலும், அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற M/s பத்ரா கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர் வசம் ஒப்படைத்து பணியினை செய்து முடிக்கப்பட்டது அதற்கான செலவினம் ரூ.6.25 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 765/இ1/2019)

21. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் சைக்கிள் ஸ்டாண்டில் வசூல் செய்யும் பணியாளர்கு நிழற்குடை அமைக்கும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் மேற்படி பணிமேற்கொள்ள ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.30000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. திரு.இ.இளங்கோவன்
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ. 29900/-

2. திரு. எ.அசோக்குமார்,
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ. 32000/-

3. திரு. ஆர். கந்தன்
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ. 31500/-

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை அங்கீகரித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 765/2019/இ1)

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.